மேல் மாகாண கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணை பரீட்சை 20 21

தரம் 9 இஸ்லாம்

பகுதி I

(1) தர்தீபுத் திலாவத் என்பது

i. அல் குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு
ii. தொழுகையை நிறைவேற்றும் ஒழுங்கு
iii. அல்குர்ஆன் இறக்கப்பட்ட ஒழுங்கு
iv. ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஒழுங்கு

2) மறுமை நாளில் முஸ்லீம்களின் செயல்கள் நிறுக்கும் தராசு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்

i. ஹிஸாப் ii ஸிராத் iii. மீஸான் iv. பஃஸ்

(3) அலட்சியமாக எத்தனை ஜும்மா தொழுகையை விட்டுவிடுபவரின் உள்ளங்களை அல்லாஹ் முத்திரை இடுகின்றான் என ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

i. 4 ii. 3 iii. 5 iv. 6

4) ஒருவரிடம் 60 ஆடுகள் காணப்படின் அவர் ஸக்காத்தாக வழங்கவேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை யாது?

i. ஆறு பெண் ஆடுகள் ii. ஏழு பெண் அடுகள் iii. ஒரு பெண் ஆடு iv. இரண்டு பெண் ஆடுகள்

5) ஹஜ் கடமை எந்த நபியின் தியாகத்தை ஞாபகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது

i. முஹம்மது நபி (ஸல்) அவர்களை ii. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை

iii. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை iv.ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை

6) ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக நிய்யத்து வைக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?

i. அல் கிரான் ii. அல் இப்றாத் iii. அல் இபாலா iv. அத்தமத்துஉ

(7) அல் குர்ஆனை மனனம் செய்த ஹாபில்கள் அதிகமாக ஷஹீதாக்கப்பட்ட யுத்தம் எது ?

i. பத்ர் யுத்தம் ii. கைபர் யுத்தம் iii. யமாமா யுத்தம் iv. உஹத் யுத்தம்

(8)" ஜாமீஉல் குர்ஆன் " எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டவர் யார்?

i. அபூபக்கர் (ரழி) ii. உமர் (ரழி) iii. உஸ்மான் (ரழி) iv. நபி (ஸல்) அவர்கள்

(9) அல் குர்ஆன் முழுமையாக எத்தனை வருடங்கள் அருளப்பட்டது ?

i. 33 ii. 23 iii. 43 iv. 53

10) நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராக தெரிவு செய்யப்பட்ட இடம் யாது?

i. உஹத் மலை ii. தூர்ஸினா மலை iii. ஹிரா குகை iv. ஸவ்ர் குகை

(10×2=20 புள்ளிகள்)

- தொடர்பு படுத்துக

11) ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் (1) லவ்ஹூல் மஹ்பூல்

12) மனிதர்களின் அனைத்து செயற்பாடுகளும் பதியப்பட்ட ஏடு (2) ஹவ்லுல் கவ்ஸர்

13) நபி (ஸல்) அவர்களின் ஒட்டகையின் பெயர் (3) ஹவாரிய்யூன்கள்

14) மறுமை நாளில் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் தடாகம் (4) மஃவா

15) சுவனத்தின் பெயர்களில் ஒன்று (5) கஸ்வா

(1×5=5 புள்ளிகள்)

- இடைவெளி நிரப்புக

16) வெவ்வேறு பிரதேசங்களை சேர்ந்த முஸ்லிம்கள் தமது மொழி வழக்கிலேயே அல்குர்ஆனை ஓதுவதை அவதானித்த ஸஹாபி.......................................... அவர்கள் அதனை உஸ்மான் (ரழி) அவர்களிடம் முறையிட்டார்.

17) ஜனாசா தொழுகையின்........................தக்பீரில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லப்படும்.

18) ஸூரா ழுஹா...........................................................வாக்கியங்களை கொண்டது.

19) நபி (ஸல்) அவர்களின் மரணத்தை தொடர்ந்து உம்மஹாத்துல் முஃமினீன்களில் முதலில் மரணித்தவர்

அன்னை.................................................................... அவர்கள் ஆவார் .

20)”அல் மஸீஹ் “எனும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுபவர்...............................

(1×5=5புள்ளிகள்)

## பகுதி 11

- **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(1) 1. "காதமுன் நபிய்யீன் "என்பதன் பொருள் யாது?
(2புள்ளிகள்)

2. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் அல்லாஹ்வின் இரண்டு நிஃமத்துக்கள் பற்றி ஹதீஸ் குறிப்பிடுகின்றது. அவ் இரண்டும் யாவை?
(4புள்ளிகள்)

3. கழாகத்ர் தொடர்பான நம்பிக்கையின் மூலம் அடையும் பயன்கள் மூன்றினை எழுதுக (6புள்ளிகள்)

2) 1. "ஜுனூப் "என்பதன் பொருள் யாது?
(2புள்ளிகள்)

2. ஜனாபதை ஏற்படுத்தும் காரணிகள் 4 தருக
(4புள்ளிகள்)

3. ஸக்காத்தை பெற தகுதியுடைய கூட்டத்தவர்களுள் 6 கூட்டத்தினர்களைக் குறிப்பிடுக

(6புள்ளிகள்)

3) 1. ஜம்உ தக்தீமிற்கான உதாரணம் ஒன்று தருக (2புள்ளிகள்)

2. ஹஜ்ஜின் பர்ளுகள் (அர்கான்) நான்கினை எழுதுக
(4புள்ளிகள்)

3. அஸ் ஸிஹாஹுஸ் ஸித்தா தொகுப்பாசிரியர்களின் பெயர்களை எழுதுக
(6புள்ளிகள்)

4) 1. ஹதீஸ் அறிவிப்பின்படி மறுமையில் நான்கு விடயங்களுக்கு பதிலளிக்காத வரையில் எந்த ஒரு

மனிதனாலும் நகர முடியாது .அவ்வாறான நான்கு விடயங்களில் இரண்டினை எழுது. (2புள்ளிகள்)

2. நபி ஈஸா (அலை) அவர்களுக்கு கொடுக்கப்பட்ட முஃஜிஸாத்துக்கள் நான்கினை குறிப்பிடுக (4புள்ளிகள்)

3. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ அருளப்பட்ட சம்பவத்தை சுருக்கமாக விளக்குக (6புள்ளிகள்)

5) 1. சுவனத்தில் ஹூருல்ஈன்களை மஹராகப் பெறுவதற்காக செய்யவேண்டிய செயற்பாடு யாது?

(2புள்ளிகள்)

2. உணவுடன் சம்பந்தப்பட்ட ஹராமாக்கப்பட்ட விடயங்கள் நான்கினை எழுதுக (4புள்ளிகள்)

3. ஸக்காத்தை முறையாக நிறைவேற்றுவதன்மூலம் அடைக்கக்கூடிய பயன்கள் ஆறினை எழுதுக

(6புள்ளிகள்)

6) 1. வீண்விரயத்துக்கான உதாரணங்கள் இரண்டினை எழுதுக
(2புள்ளிகள்)

2. சிக்கனம் மற்றும் சேமிப்புகளினூடாக பெற்றுக்கொள்ள கூடிய நன்மைகள் நான்கினை குறிப்பிடுக

(4புள்ளிகள்)

3. ஜும்மா நாளில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஆறு எழுதுக
(6புள்ளிகள்)

7) கீழுள்ள தலைப்புகளில் இரணவையேனும் இரண்டினை தெரிவுசெய்து ஆறு வாக்கியங்கள் எழுதுக

1. தேசத்தின் மீது பற்று

2. பிற சமயங்களை மதித்தல்

3. ஹஜ்ஜத்துல் விதா

4. மஹப்பதுர் ரஸூல்
(6×2=12புள்ளிகள்)

மேல் மாகாண கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணை பரீட்சை 20 21

தரம் 9 இஸ்லாம்

விடைகள்

1) 1. இறுதி நபித்துவம்

2.ஆரோக்கியமும் ஓய்வும்

3.

- அல்லாஹ் அளித்தவற்றில் திருப்தி கண்டு வாழ
- ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு அது தூண்டல் செய்யும்.
- அபாயகரமான சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு செயல்பட தூண்டுதலாக

அமையும்.

- தீமைகளை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கச் செய்யும்.
- துன்பங்கள், துயரங்களின் போது பொறுமையைக் கைக்கொள்ள செய்யும்
- விரக்தி நீங்கும்.

2. 1. ஜனாபத் உடையோர்.

2.

- ஒரு முஸ்லிம் மரணம் அடைதல்
- தூக்கத்தில் அல்லது விழிப்பில் இந்திரியம் வெளியாதல்.
- ஆண் பெண் உடலுறவு கொள்ளல்
- ஹைல் ஏற்படல்
- நிபாஸ் ஏற்படல்

3.

- வறியவர்கள்,
- ஏழைகள்,
- தானம் வசூல் செய்யும் ஊழியர்கள்,
- புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள்,
- அடிமைகளை விடுதலை செய்வதற்கு,
- கடனில் மூழ்கியவருக்கு,

- அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோருக்கு,
- வழிப்போக்கர்கள்.

3) 1.

- ழுஹருடைய நேரத்தில் ளுஹர் தொழுதுவிட்டு அதனைத் தொடர்ந்து

அஸரையும்,

- மஃரிபுடைய நேரத்தில் மஃரிபை தொழுதுவிட்டு அதைத்தொடர்ந்து

இஷாவையும் சேர்த்துத் தொழுதல்

2.

- நிய்யத்து வைத்தல்.
- துல் ஹஜ் 9ஆம் நாள் அரஃபாவில் தரித்தல்
- தவாபுல் இபாழாவை நிறைவேற்றல்,
- ஸஃயு செய்தல்
- தலை முடி களைதல்
- ஒழுங்கு முறையாக செய்தல்.

3.

- இமாம் புகாரி (ரஹ்),
- இமாம் முஸ்லிம் (ரஹ்),
- இமாம் அபூதாவூத் (ரஹ்)
- இமாம் திர்மிதி (ரஹ்)
- இமாம் நஸஹீ (ரஹ்
- இமாம் இப்னு மாஜா (ரஹ்)

4) 1.

- உனது வயதை எவ்வாறு கழித்தாய்?
- அறிவை எவ்வாறு பயன்படுத்தினாய்?
- செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து எவ்வாறு செலவு செய்தாய்?
- வாழ்நாளை எவ்வாறு பயன்படுத்தினாய்.?

2.

- மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்
- பிறவிக் குருடர்களைக் குணப்படுத்தல்
- குஷ்டரோகிகளைக் குணப்படுத்தல்

- வீட்டில் மறைவாக வைக்கப்பட்டுள்ள பொருட்களை சரியாக அறிவித்தல்.

3. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறக்கப்பட்ட சம்பவத்தை விளக்கி

இருந்தால் புள்ளிகளை வழங்கவும்

5) 1. மஸ்ஜிதுகளை துப்பரவு செய்தல்.

2.

- பன்றி இறைச்சி,
- இறந்தவை,
- இரத்தம்,
- உடலுக்கும் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை,
- போதையை ஏற்படுத்தக்கூடியவை,
- தங்கம் வெள்ளி பாத்திரங்களில் உண்ணலும் பருகலும்

3.

- சமூகத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைதல்.
- செல்வம் பெருகுதல்.
- வறுமை நீங்குதல்
- குற்றச்செயல்கள் குறைதல்.
- பரக்கத் ஏற்படுதல்.
- மறுமையில் ஈடேற்றம் கிடைத்தல் போன்ற பொருத்தமான விடைகள்

எழுதியிருந்தாள் புள்ளிகளை வழங்கவும்.

6) 1.

- வீணாகவும் கேளிக்கைகளிலும் நேரத்தை கழித்தல்
- பொருத்தமற்ற வழியில் பணத்தை செலவிடுதல்
- அளவுக்கு அதிகமாக சாப்பிடல்
- தேவைக்கதிகமாக ஆடை அணிகலன்களை கொள்வனவு செய்தல்

2.

- இம்மையிலும் மறுமையிலும் நன்மையை பெற்றுத்தரும்
- கடன் பிரச்சினையில் இருந்து பாதுகாக்கும்

- பொருளாதார நெருக்கடிகளை சீர்செய்யும்
- மற்றவர்களிடம் தங்கி வாழும் நிலையை இல்லாமல் ஆக்கும்
- மனநிறைவான வாழ்விற்கு வழிவகுக்கும்

3.

- ஜும்மாவின்கான சுன்னத்தான புளிப்பை குளித்தல்
- ஸூரா கஃப் ஓதல்,
- பள்ளிக்கு வரும்போது தலைக்கு எண்ணை மற்றும் நறுமணம் பூசிக் கொள்ளுதல்,
- அழகான ஆடையை அணிந்து கொள்ளுதல்.
- பள்ளிக்கு நேரத்திற்கு சமூகமளித்தல்.
- பள்ளியில் இருக்கின்ற மனிதர்களை கடந்து செல்லாமல் தன்னால்

முடியுமான அளவு தொழுதுவிட்டு மௌனமாக இருத்தல்.

- கதீபின் உரையை செவிமடுத்தல்

7. தலைப்புகளை பொருத்தமாக விளக்கி இருந்தால் புள்ளிகளை வழங்கவும்